மகாகால பைரவர், சொர்ண ஆகர்ஷண பைரவர் கோயில் கும்பாபிஷேகம்

அவிநாசி, ஆக.26: அவிநாசி அருகே அணைப்புதூர் அழகாபுரி நகர் திருமுருகநாத சுவாமி திருமடத்தில் சொர்ண ஆகர்ஷண பைரவர், மகாகால பைரவர் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோயில் கும்பாபிஷேகம் திங்கள்கிழமை நடைபெற்றது.

பிரதிஷ்டை செய்யப்பட்ட மகாகால பைரவர்.

இவ்விழாவைமுன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை மாலை வாஸ்து பூஜை, முதல்கால வேள்வி உள்ளிட்டவை நடைபெற்று, அன்னதானம் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து திங்கள்கிழமை காலை 2-ஆம் கால வேள்வியுடன் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற ஏராளமான பக்தர்கள் 108 வலம்புரி சங்கில் பைரவருக்கு அபிஷேகம் செய்து தரிசனம் செய்தனர். இவ்விழாவுக்கு திருமுருகநாத சுவாமி திருமடம் சுந்தரராச அடிகளார் தலைமை வகித்தார். வாதவூர் அடிகளார் சி.பா.ஞானசுந்தரம் முன்னிலை வகித்தார்.

திருமட மேலாளர் சு.திருமூர்த்தி ஒருங்கிணைத்தார். மேலும் ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமியிலும் காலை 9 மணிக்கு யாக வேள்வியுடன் சங்காபிஷேகமும், மாதத்தின் 3-ஆவது சனிக்கிழமை திருவாசகம் முற்றோதலும் நடைபெறும் என கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

கூலி உயர்வு பிரச்னைக்கு தீர்வு காண விசைத்தறியாளர்கள் கோரிக்கை

அமைச்சரிடம் மனு

பல்லடம், ஆக. 26: கூலி உயர்வு பிரச்னைக்கு தீர்வு காண வலியுறுத்தி அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் ஆகியோரிடம்கோவை,திருப்பூர் மாவட்ட விசைத்தறியாளர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

திருப்பூர், கோவை மாவட்டங்களில் விசைத்தறியாளர்களுக்கு மூன்று ஆண்டுக்கு ஒருமுறை ஜவுளி உற்பத்தியாளருடன் கூலி உயர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது வழக்கம். இதில் 2014-இல் உயர்த்தப்பட்ட கூலியில் இருந்து 15 சதவீதம் உயர்த்தி வழங்க பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஜவுளி உற்பத்தியாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட கூலியை வழங்கி வந்த நிலையில், மீண்டும் கூலியை குறைத்து வழங்கி வருவதாக விசைத்தறி உரிமையாளர்கள் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் தொழிலாளர் நலத் துறை ஆணையர் முன்னிலையில் ஆகஸ்ட் 8-ஆம் தேதி பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருப்பூரில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் ஆகியோரை சந்தித்த திருப்பூர், கோவை மாவட்ட விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத்தினர்.

இதில் விசைத்தறியாளர் சங்க நிர்வாகிகள் பங்கேற்ற நிலையில், ஜவுளி உற்பத்தியாளர்கள் தரப்பில் இருந்து ஒருவர் மட்டுமே வந்திருந்தார். இதையடுத்து ஆகஸ்ட் 22-ஆம் தேதி இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதில் ஜவுளி உற்பத்தியாளர்கள் யாரும் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சியர் தா. கிறிஸ்துராஜ் ஆகியோரை விசைத்தறியாளர்கள் சந்தித்து அடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் ஜவுளி உற்பத்தியாளர்களை பங்கேற்க செய்து கூலி உயர்வு பிரச்னைக்கு தீர்வு காண வலியுறுத்தி கோரிக்கை மனு அளித்தனர். இதில் உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆட்சியர் தா. கிறிஸ்துராஜ் ஆகியோர் தெரிவித்ததாகதிருப்பூர்,கோவைமாவட்ட விசைத்தறி உரிமையாளர் சங்க செயலாளர் அப்புக்குட்டி (எ)பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

பெண் கல்வி தலைமுறையை காக்கும்

மாநகர காவல் துணை ஆணையர் ஏ.சுஜாதா

திருப்பூர், ஆக.26: பெண் கல்வி தலைமுறையை காக்கும் என்று மாநகர காவல் துணை ஆணையர் ஏ.சுஜாதா தெரிவித்தார்.

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு-2 மற்றும் திருப்பூர் அரிமா சங்கம் சார்பில் கல்லூரி வளாகத்தில் பெண்கள் சமத்துவ தினத்தையொட்டி விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் மனித சங்கிலி திங்கள்கிழமை நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சிக்கு நாட்டு நலப்பணித் திட்ட அலகு 2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார், சிறப்பு விருந்தினராக திருப்பூர் மாநகர காவல் துணை ஆணையர் ஏ.சுஜாதா கலந்து கொண்டு பேசியதாவது:

தற்போது அரசு உயர் பதவிகளான குடியரசுத் தலைவர், பிரதமர், ஆளுநர், முதல்வர், ஆட்சியர், ஆணையர் என அதிகாரம் செலுத்தும் பதவியில் பெண்கள் முத்திரை பதித்து வருகின்றனர். பெண்கள் துணிச்சலாக விண்வெளி செல்வதிலும், விளையாட்டு துறையிலும் சாதித்து வருகின்றனர். ஆணும், பெண்ணும் சமம் என்பதை அனைவரும் உணர வேண்டும். பெண்களுக்குரிய உரிமைகளை தவறாக பயன்படுத்தக் கூடாது. தங்களது செயல்பாடுகளால் எந்த ஒரு பெண்ணையும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் துன்புறுத்தக் கூடாது.

பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், வன்முறைகள் மற்றும் எந்தவொரு பாதிப்பையும் தடுப்பதற்கான முழு முயற்சியில் ஈடுபட வேண்டும். பெண் கல்வியை ஊக்குவிக்க வேண்டும், அது அத்தலைமுறையை காக்கும். பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் குறித்து அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்றார்.

மாணவிகள் கயல்விழி மற்றும் இந்துமதி ஆகியோரது சிலம்பாட்டம் நடைபெற்றது. முன்னதாக அரிமா சங்கத் தலைவர் பரமசிவம் வாழ்த்துரை வழங்கினார். மாணவ பிரதிநிதி ரேவதி நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் வ.கிருஷ்ணன் செய்திருந்தார்.

கிருஷ்ண ஜெயந்தி...

கிருஷ்ண ஜெயந்தியையொட்டி, அவிநாசி நாராசா வீதியில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற ராதை, கிருஷ்ணர் வேடமணிந்த மழலையர்.

FIVE STAR Business Finance Limited

பைவ்-ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்

CIN: U65991TN1984PLC010844

பதிவு அலுவலகம்: புதிய எண். 27, பழைய எண்.4, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010

Ph: 044- 4610 6200, E-Mail: info@fivestargroup.in, Website: www.fivestargroup.in

கிளை அலுவலகம்: எண்.52, 1வது தளம், P.N.ரோடு, நேசவாளர் காலனி, பாரத் பெட்ரோல் பங்க் எதிரில், திருப்பூர் - 641602 Mob: 99424 22750, 89258 32121

ஏல அறிவிப்பு மூலம் பொது ஏலம்

APPENDIX- IV-A [See provision to rule 8 (6)]

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்டில் அடமானம் வைத்துள்ளனர். SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் கீழுள்ள விதிகளின் படி, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் அதன் அசையா சொத்தினை (ஈடுபெற்ற ஆஸ்தி / சொத்து) சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளனர். பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட் -க்கு செலுத்த வேண்டிய கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் பாக்கிகள், பொருந்தக்கூடிய வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை பெறுவதற்காக பொது ஏலம் மூலமாக ஈடுபெற்ற சொத்து விற்பனை செய்யப்படும். ஈடுபெற்ற ஆஸ்தி **30.09.2024 அன்று விற்பனை செய்யப்படும்** மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் (இனி விதிகள் என்று குறிப்பிடப்படும்) விதி 8(6)& 9(1) ன் கீழும் கீழ்க்குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் ஈடுபெற்ற ஆஸ்திகள் "உள்ள இடத்தல் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" மற்றும் "பின்னர் கம்பெனியை எதற்கும் நாடமுடியாது" என்ற அடிப்படையில் விற்கப்படும்.

கடன்தாரர்கள் பெயர் & கடன் கணக்கு எண்.	நிலுவைத்தொகை & கோரிக்கை அறிவிப்பு தேதி	சொத்து விவரம்	குறைந்தபட்ச விலை (INR) / EMD /ஏல உயர்வுத்தொகை
1.திரு.ஜெயக்குமார் S (கடன்தாரர்) S/o.சுப்பையா, 2.திருமதி.பத்மாவதி J (சக-கடன்தாரர்) W/o.ஜெயக்குமார் S **இருவரது முகவரி:** எண்.1554, வாஞ்சி நகர், பலவாஞ்சிபாளையம் ரோடு, திருப்பூர் டவுன், திருப்பூர் (மாவட்டம்) தமிழ்நாடு-641 608. **Loan Account: Loan No: LA45369 & LA45370**	**கடன் கணக்கு எண்.LA45369:** 23.08.2024 அன்றுள்ளபடி ₹ **33,15,154.75** (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து பதினைந்தாயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு மற்றும் பைசா எழுபத்து ஐந்து மட்டும்) **கடன் கணக்கு எண். LA45370:** 23.03.2024 அன்றுள்ளபடி ₹ **5,37,796.22** (ரூபாய் ஐந்து லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஆறு மற்றும் பைசா இருபத்து இரண்டு மட்டும்) **கோரிக்கை அறிவிப்பு தேதி : 10.03.2023**	திருப்பூர் பதிவு மாவட்டம் மற்றும் நல்லூர் சார்பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.436 பகுதி (சர்வே எண்.436 பரப்பு 10.50 ஏக்கரில் லேஅவுட்டாக அமைக்கப்பட்டது), **வீரப்பாண்டி கிராமம், திருப்பூர் தாலுகா, திருப்பூர் மாவட்டம், மனை எண்.43 பகுதி, கதவு எண். 1554-A, வாஞ்சி நகர், பலவாஞ்சிபாளையம் ரோடு, திருப்பூர்-641608 என்னும் முகவரியிலுள்ள 1200 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.43-ன் பகுதி, தெற்கு: மனை எண்.42, கிழக்கு: 23 அடி தெற்கு வடக்கு லேஅவுட் ரோடு, மேற்கு: மனை எண்.64. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 60 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 20 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் 20 அடி. அதனுடன் சாலைகளை உபயோகிக்கும் உரிமை.	**குறைந்தபட்ச விலை : ₹ 22,00,000/-** (ரூபாய் இருபத்து இரண்டு லட்சம் மட்டும்) **EMD: ₹ 2,20,000/-** (ரூபாய் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) **ஏல உயர்வுத்தொகை: ₹ 10,000/-** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

ஏலத்தேதி மற்றும் நேரம் : 30.09.2024 அன்று காலை 11.00 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் நேரம் & தேதி: **18.09.2024** அன்று காலை 10 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை

பொது ஏலத்திற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

- "உள்ள இடத்தல் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" மற்றும் "பின்னர் கம்பெனியை எதற்கும் நாடமுடியாது" அடிப்படையிலும் மற்றும் பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்டினால் அறியப்பட்ட அல்லது அறியப்படாத தற்போதைய மற்றும் எதிர்கால வில்லங்கங்கள் அடிப்படையிலும் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறும். ஏல படிவம், அறிவிப்பு, பொது ஏலத்திற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை அலுவலகம், பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட், எண்.52, 1வது தளம், P.N.ரோடு, நெசவாளர் காலனி, பாரத் பெட்ரோல் பங்க் எதிரில், திருப்பூர் - 641602.ல் பெற்றுக்கொள்ளலாம்.
- குறைந்தபட்ச விலைக்கு குறைவாக ஈடுபெற்ற சொத்து விற்பனை செய்யப்படமாட்டாது.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்தவரையில் சொத்துக்களின் மீது எந்தவித வில்லங்கமும் கிடையாது. எனினும், எந்தவொரு உரிமை கோரல்கள், கட்டணங்கள், நிலுவைத்தொகைகள், வில்லங்கங்கள் தொடர்பாக தங்கள் சொந்த சுயாதீன விசாரணைகளை விருப்பமுள்ள ஏலதாரர்கள் மேற்கொள்ள வேண்டும் மற்றும் தங்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் சொத்தின் உரிமை, அளவு / அளவீட்டு பற்றி திருப்தி அடைய வேண்டும். சொத்தில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், ஏலம் சமர்ப்பித்த தேதியிலிருந்து எதிர்காலத்தில் பெறப்படும் அனைத்து பொறுப்புகளுக்கும் பங்கு பெறும் ஏலதாரர் மட்டுமே பொறுப்பாவார்.
- விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்து தொடர்பாக எந்தவொரு கோரிக்கை, சொத்தின் மீது கட்டணங்கள் / வில்லங்கங்கள் அல்லது இதர விஷயங்கள் எதுவும் ஏலத்தை சமர்ப்பித்தபின் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- விற்பனையின் கீழ் உள்ள சொத்து தொடர்பாக எந்தவொரு கட்டணம், உரிமை, வில்லங்கம், அரசாங்கம், உள்ளாட்சி அமைப்புகள் அல்லது வேறு எவருக்கேனும் சொத்து வரி பாக்கி, மின்சார கட்டணம் பாக்கி இருந்தால் அதற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் பொறுப்பேற்க மாட்டார்.
- பொது ஏல அறிவிப்பு / விளம்பரம் போன்றவை பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்-ன் எந்தவொரு சலுகை, அர்ப்பணிப்பு அல்லது எந்தவொரு பிரதிநிதித்துவத்தையும் கொண்டதாக கருதப்படாது. மூன்றாவது நபர் உரிமை கோரல்கள் / உரிமைகள் / பாக்கிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் பொறுப்பேற்க மாட்டார்.
- SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் கீழுள்ள விதிகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை இருக்கும்.
- **விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலங்களை EMDயுடன் சமர்ப்பிக்க வேண்டும். இது 28.09.2024 அன்றோ அதற்கு முன்னரோ மாலை 5.00 மணிக்குள் "Five Star Business Finance Limited" நிறுவனத்தின் பெயரில் டிடி மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.**
- ஏலங்கள் மற்றும் இதர ஆவணங்களை ஒரு சீலிட்ட உறையில் வைத்து அதில் **"Offer for Purchase - Jeyakumar's Property"** என்று குறிப்பிட்டு ஏலங்களை சமர்ப்பிப்பதற்கு கடைசி நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை வந்தடையும்படி அனுப்ப வேண்டும்.
- i) இஎம்டி செலுத்தியதற்கான அத்தாட்சி ii) பான் கார்ட் நகல் iii) அடையாள அட்டை அத்தாட்சி / முகவரி அத்தாட்சி / ஆதார் அட்டை / கேஒய்சி (சுயசான்றளிக்கப்பட்ட நகல்கள்) ஆகியவற்றை ஏலம் சமர்ப்பிப்பதற்கு முன் ஏலதாரர் அளிக்க வேண்டும். இல்லையெனில் ஏலம் நிராகரிக்கப்படும்.
- பொது ஏல நடைமுறைகளில் ஏலதாரர் மட்டுமே பங்கேற்க வேண்டும். இதர நபர் அனுமதிக்கப்பட மாட்டார்.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்டு ஆபர் ஏற்றுக்கொண்ட பின்னர் உடனடியாக வாங்கும் தொகையில் 25%-ஐ வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் EMD பறிமுதல் செய்யப்படும். பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்-லிருந்து அதனை ஏலதாரர் கோர முடியாது.
- வாங்கும் தொகையில் மீதமுள்ள 75%ஐ வெற்றி பெற்ற ஏலதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் எந்தவித அறிவிப்பும் இன்றி ஏலதாரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். திரும்ப கோருவதற்கான எந்தவித கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் அந்த சொத்து மறுமுறை ஏலம் விடப்படும் மற்றும் செலுத்த தவறிய ஏலதாரர் அந்த சொத்து / தொகையில் எந்தவித உரிமையும் கோர முடியாது. மறு ஏலத்தில் பங்கேற்க அவர்களுக்கு தகுதி இல்லை.
- ஈடுபெற்ற சொத்து விற்பது தொடர்பாக ஏலதாரர்கள் / வெற்றி பெற்ற ஏலதாரர் டெபாசிட் செய்த தொகைக்கு EMD அல்லது எந்த வட்டியும் பொருந்தாது.
- (ஏ) பொருந்தக்கூடிய முத்திரை வரி/ பதிவு / மாற்று கட்டணங்கள் (பி) அனைத்து சட்டரீதியான, சட்டப்பூர்வமற்ற, மாற்றம், மின்சாரம், கழிவுநீர் கட்டணங்கள், ஏதாவது பாக்கி, வரி, கட்டணங்கள், வரிகள், மதிப்பீடு கட்டணங்கள், ஏதாவது நபர், சங்கம் அல்லது அதிகாரிக்கு பாக்கி இருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் மட்டுமே செலுத்த வேண்டும்.
- வெற்றிபெற்ற ஏலதாரருக்கு மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட வடிவில் விற்பனை சான்றிதழ் வழங்கப்படும்.
- நடைமுறையில் உள்ள முத்திரை மற்றும் பதிவுச் சட்டத்தின் விதிகளின் படி விற்பனைச் சான்றிதழுக்கான கட்டணங்கள் பதிவு போன்றவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொருந்தக்கூடிய போக்குவரத்து, பதிவு கட்டணம், முத்திரை கட்டணம், வரிகள், கட்டணம் போன்றவற்றிற்கான கட்டணங்களை வெற்றி பெற்ற ஏலதாரர் ஏற்றுக்கொள்வார்.
- விற்பனை சொத்தில் ஏதேனும் வில்லங்கம் இருந்தால், வில்லங்கத்தை டிஸ்சார்ஜ் செய்ய வட்டி, செலவு மற்றும் கட்டணங்கள் உள்ளிட்ட தேவையான தொகையை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் வெற்றி பெற்ற ஏலதாரர் / வாங்குபவர் செலுத்த வேண்டும்.
- ஒருவேளை பொது ஏலம் நிறுத்தப்பட்டால், ஒத்தி வைக்கப்பட்டால், மறுபரிசீலனை செய்தால் அல்லது ரத்து செய்யப்பட்டால், பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட், திருப்பூர் கிளையில் உள்ள அறிவிப்பு பலகையில் பொது அறிவிப்பு வைக்கப்படும். இது குறித்து ஏலதாரர் மற்றும் இதர நபர்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்தவித அறிவிப்பும் அனுப்பப்பட மாட்டாது.
- ஏலதாரர்களால் ஏலத்தை சமர்ப்பிப்பது, அவர்கள் பொது ஏலத்தை நிர்வகிக்கும் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்து, புரிந்து கொண்டு ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.
- ஏல நடைமுறைகள் முடிந்த பின்னர் வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு EMD தொகை திரும்ப வழங்கப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு அதிகபட்ச விலைப்புள்ளி / விலைகோரலை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயமில்லை. மேலும் அங்கீரிக்கப்பட்ட அதிகாரி, எந்தகாரணமும் கூறாமல், ஏதேனும் அல்லது அனைத்து விலைக்குறிப்பீட்டினையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க அல்லது பொது ஏலத்தை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

தேதி : 27.08.2024; இடம் : திருப்பூர் — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்

'பழங்குடியினர் ஏமாற்றி பிழைப்பதில்லை'

அவிநாசி, ஆக.26: பழங்குடியினர் யாரையும் ஏமாற்றி பிழைப்பதில்லை என்று சிந்துவெளி பண்பாட்டு ஆய்வாளரும், முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியுமான ஆர்.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

விழாவில் பேசுகிறார் சிந்துவெளி பண்பாட்டு ஆய்வாளரும், முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியுமான ஆர்.பாலகிருஷ்ணன்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் (தமுஎகச) அவிநாசி கிளை மற்றும் நவீன மனிதர்கள் சார்பில் சிந்து சமவெளி நூற்றாண்டு விழா அவிநாசியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சூழலியலாளர் கோவை சதாசிவம் தலைமை வகித்தார். இதில் தமிழ் பேராசிரியர் மணி வண்ணன், ரோட்டரி பொறுப்பாளர் பூபதி, நவீன மனிதர்கள் அமைப்பு பொறுப்பாளர் பாரதி சுப்பராயன், தமுஎகச மாநில செயற்குழு உறுப்பினர் ஈஸ்வரன், மாவட்ட செயலாளர் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொறுப்பாளர் தினகரன் வரவேற்றார். மாநிலத் துணைத் தலைவர் நந்தலாலா 'அசதிக்கு சுடர் தந்ததேன்' என்ற தலைப்பில் பேசினார்.

இதில் சிந்துவெளி பண்பாட்டு ஆய்வாளரும், முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியுமான ஆர்.பாலகிருஷ்ணன் பேசியதாவது:

அரசர்களும், ஆயுதங்களும் இல்லாதது சிந்துவெளி சமூகம். பழங்குடிகளுடைய நாகரிகம் திராவிட நாகரிகமே ஆகும். பழங்குடிகள்தான் இந்நாட்டின் வேர்கள். பள்ளத்திலிருந்து மேட்டை நோக்கி தண்ணீர் பாசனம் செய்தவர்கள். ராஜஸ்தானில் சிக்காரி என்ற மாவட்டத்தில் அவிநாசி, கரூர், அந்தியூர் என்ற ஊர்கள் உள்ளன.

பழங்குடியினர் யாரையும் ஏமாற்றி பிழைப்பதில்லை. சத்தீஸ்கர், ஒடிஸாவும் சங்க இலக்கியத்தின் நிகழ்கால சோதனைக் கூடங்கள். இயற்கை சீற்றம் ஏற்பட்டால் மனிதன் புலம்பெயர்ந்து கொண்டே இருப்பான். வன்னி மரத்தின் வேர்களை பிடித்து செல்வார்கள். வன்னி மரச் சில்லுகளை உரசித்தான் நெருப்பை உருவாக்கி இருக்கிறார்கள். பெரும்பான்மையாக தலவிருட்சமாக வைத்து பாதுகாக்கப்பட்ட மரங்கள் வன்னிமரங்களே.

எருமை மாட்டை வளர்ப்பு பிராணியாக வளர்த்தது சிந்துவெளி. நர்மதா நதியை தாண்டி சிங்கம் வந்ததே இல்லை. சிந்துவெளியில் குதிரை இல்லை. சங்க இலக்கியங்களை ஆவணமாக்கியவர்கள் நம் முன்னோர்கள். அந்த நவீன மனிதர்களின் நிகழ்கால வழித்தோன்றல்கள்தான் நாம்.

1924-ஆம்ஆண்டு பிரிட்டனில் இருந்து வந்த மனிதர், ஜான் மாக்சில் கண்டுபிடித்ததுதான் சிந்து சமவெளி. தமிழக அரசு ஜான் மாக்சில் சிலை வைப்பதாக அறிவித்துள்ளது. இதைக் கொண்டாடுவோம் என்றார்.

இதைத் தொடர்ந்து உடுமலை தமுஎகச மக்கள் கலைக்குழு துரையரசன் பாடல்கள், பொன் மண் மத்தாளம் கலைக்குழுவின் அரங்கேற்றம் உள்ளிட்டவை நடைபெற்றன.

சாலை விபத்தில் கல்லூரி மாணவர் உயிரிழப்பு

திருப்பூர், ஆக.26: திருப்பூரை அடுத்த ஊத்துக்குளி அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் கல்லூரி மாணவர் திங்கள்கிழமை உயிரிழந்தார்.

திருப்பூரை அடுத்த ஊத்துக்குளி அணைப்பாளையத்தைச் சேர்ந்தவர் நவீன்குமார் (20). இவர் திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் 2-ஆம் ஆண்டு படித்து வந்தார்.

இந்த நிலையில், ஊத்துக்குளி ஆர்.எஸ்- படியூர் சாலையில் இருசக்கர வாகனத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த மற்றொரு இருசக்கர வாகனத்தின் மீது இவரது வாகனம் மோதியது.

இதில், தலையில் பலத்த காயமடைந்த நவீன்குமாருக்கு, திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் உயர் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் திங்கள்கிழமை அதிகாலை உயிரிழந்தார். இது தொடர்பாக ஊத்துக்குளி காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

உதகை தொட்டபெட்டா காட்சிமுனை மீண்டும் திறப்பு

தொட்டபெட்டா காட்சிமுனையைக் கண்டு ரசிக்கும் சுற்றுலாப் பயணிகள்.

உதகை, ஆக. 26: உதகை தொட்டபெட்டா காட்சிமுனை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட திங்கள்கிழமை மீண்டும் திறக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், உதகையில் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக தொட்டபெட்டா காட்சிமுனை உள்ளது. தென்னிந்தியாவின் இரண்டாவது உயர்ந்த சிகரமான தொட்டபெட்டா மலைச்சிகரத்தில் அமைந்துள்ள தொலைநோக்கி காட்சிமுனையைக் கண்டு ரசிப்பதற்காக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தினசரி வந்து செல்கின்றனர்.

இந்நிலையில், தொட்டபெட்டா காட்சிமுனைக்கு செல்லும் சாலையில் இருந்த சோதனைச் சாவடி பகுதியில் ஏற்பட்டுவந்த போக்குவரத்து நெரிசல் காரணமாக, சோதனைச் சாவடியை வேறு இடத்தில் அமைக்கும் பணிகள் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு தொடங்கி நடைபெற்று வந்தன. இந்நிலையில், இறுதிக்கட்ட பணிக்காக கடந்த 20 முதல் 25-ஆம் தேதி வரை காட்சிமுனைக்கு செல்ல சுற்றுலாப் பயணிகளுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சோதனைச் சாவடி அமைக்கும் பணிகள் நிறைவடைந்த நிலையில் தொட்டபெட்டா காட்சிமுனைக்கு செல்ல திங்கள்கிழமை முதல் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர். ஒருவாரத்துக்குப் பின் மீண்டும் அனுமதிக்கப்பட்டதால் தொட்டபெட்டா காட்சிமுனையை சுற்றுலாப் பயணிகள் திங்கள்கிழமை கண்டு ரசித்தனர்.

உதகையில் வீட்டின்மீது விழுந்த கார்

உதகை, ஆக. 26: உதகையில் எதிரே வந்த வாகனத்திற்கு வழி விடுவதற்காக விலகியபோது பள்ளத்தில் இருந்த வீட்டின்மீது கார் விழுந்து விபத்துக்குள்ளானது.

உதகையில் வீட்டின்மீது விழுந்து விபத்துக்குள்ளான கார்.

நீலகிரி மாவட்டம், உதகைக்கு சென்னையைச் சேர்ந்தவர்கள் காரில் சுற்றுலா வந்துள்ளனர். இவர்கள், உதகை - கூடலூர் நெடுஞ்சாலையில் ஃபிங்கர்போஸ்ட் பகுதியில் காரில் திங்கள்கிழமை சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது, எதிரே வந்தவாகனத்திற்குவழி விடுவதற்காக காரை சாலையோரத்தில் நிறுத்த முயன்றுள்ளனர். இதில், நிலை தடுமாறி பள்ளத்தில் இருந்த வீட்டின்மீது கார் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காரில் பயணித்தவர்களுக்கும், வீட்டில் இருந்தவர்களுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இது குறித்து டி3 போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இணையதள பராமரிப்பு பணி

ஆகஸ்ட் 30-இல் பாஸ்போர்ட் அலுவலக சேவை இருக்காது

கோவை, ஆக. 26: தொழில்நுட்ப பராமரிப்புப் பணிக்காக இணையதளம் முடக்கப்படுவதால் ஆகஸ்ட் 30- ஆம் தேதி பாஸ்போர்ட் அலுவலக சேவை இருக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோவை மண்டல பாஸ்போர்ட் அதிகாரி கே.எஸ்.சதீஷ் கூறியிருப்பதாவது:

பாஸ்போர்ட் சேவா ப்ராஜெக்ட் எனப்படும் பாஸ்போர்ட் அலுவலக இணையதளம் தொடர்பான தொழில்நுட்பப் பராமரிப்புப் பணி நடைபெற இருப்பதால் வருகிற ஆகஸ்ட் 29- ஆம் தேதி இரவு 8 மணி முதல் செப்டம்பர் 2- ஆம் தேதி காலை 6 மணி வரை இணையதளம் செயல்படாது.

எனவே, ஆகஸ்ட் 30- ஆம் தேதி பாஸ்போர்ட் விண்ணப்பத்தை வழங்குவதற்காக முன்பதிவு செய்திருப்பவர்கள், வேறு ஒரு தேதியில் நேரம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

இது தொடர்பான மேலும் விவரங்கள், உதவிகளுக்கு மண்டல பாஸ்போர்ட் அலுவலக இ-மெயிலில் (rpo.cbe@mea.gov.in) தொடர்பு கொள்ளலாம். மேலும், ஆகஸ்ட் 30- ஆம் தேதி பாஸ்போர்ட் தொடர்பான விசாரணைகள், சேவைகள் எதுவும் இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.